# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:80** **தேதி:-06.12.2015.**

## பாதிக்கப்பட்ட சென்னை மக்களுக்கு உதவிக்கரம் நீட்டுவோம்

அன்பார்ந்த தோழர்களே,

கடந்த மாத வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட கடலூர் மாவட்ட மக்களுக்கு BSNL ஊழியர் சங்கத்தின் சார்பாக ஒரு லட்ச ரூபாய் பெருமானமுள்ள நிவாரணப் பொருட்களை கொடுத்திருந்தோம். ஆனால் அதனை பலமடங்கு மிஞ்சும் வண்ணம் இந்த மாத துவக்கத்தில் பெய்த மழையால் சென்னை தீவுகளாய் மாறியது. மிகப்பெரிய துன்பத்தில், துயரத்திலும் சென்னை மக்களை வாட்டி வதைத்தது. கானாமல் போன ஆறுகளும், எரிகளும், பெருக்கெடுத்தன. மக்களின் வாழ்விடங்கள் எல்லாம் நீரால் நிறைந்தது. போக்குவரத்தும் மின்சாரமும், தனியார் தொலைபேசி சேவைகளும் முடங்கி போனது. சாலை போக்குவரத்துக்கு பதிலாக நகருக்குள்ளேயே படகு சவாரி செய்ய வேண்டியதாயிற்று. மருத்துவமனைகளும், பெரும் பாதிப்பிற்கு உள்ளானது.

கற்பனைக்கெட்டாத இந்த வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிட வேண்டும் என தமிழ் மாநில BSNL ஊழியர் சங்கம் மாவட்ட சங்கங்களுக்கு அறைகூவல் விட்டிருந்தது. நமது தமிழ் நாடு தொலை தொடர்பு ஒப்பந்த தொழிலாளர் சங்கமும் இதே போன்ற அறைகூவலை விட்டுள்ளது. அதன் அடிப்படையில் கிருஷ்ணகிரி தோழர்கள் சுமார் 78,000 ரூபாய் மதிப்புள்ள நிவாரணப் பொருட்களை அங்குள்ள அன்பு இல்லம் மூலமாக சென்னைக்கு அனுப்பியுள்ளனர். திருப்பூர் தோழர்கள் சுமார் இரண்டு லட்ச ரூபாய் பெருமானமுள்ள பொருட்களை திரட்டி அங்குள்ள தொழிற்சங்க கூட்டமைப்பின் மூலமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுப்பியுள்ளனர். இந்த தோழர்களுக்கு தமிழ் மாநில சங்கத்தின் வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் உரித்தாக்கிக் கொள்கிறோம்.

இதற்கு மேல் நமது மாவட்ட சங்கங்களும், கிளை சங்கங்களும், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நமது தோழர்களிடம் இருந்து வசூலிக்கப்படும் பணத்தையும், பொருட்களையும் தமிழ் மாநில சங்கத்திற்கு 09.12.2015க்குள் அனுப்பி வைக்க வேண்டுகிறோம். அதனை ஒருமுகப்படுத்தி சென்னையில் தேவையுள்ள பகுதிக்கு தமிழ் மாநில சங்கங்கள் இரண்டும் இணைந்து வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. துயரப்படும் மக்களுக்கு ஆதரவுக் கரம் நீட்ட விரைந்து செயல்பட வேண்டும் என தோழர்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

### மனிதாபமானமிக்க கேரள தோழர்கள்

டிசம்பர் 2 ,3 மற்றும் 4ஆம் தேதிகளில் கேரள மாநில BSNLஊழியர் சங்க மாநில மாநாடு கோழிக்கோட்டில் நடைபெற்றது. சென்னை வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டதை எடுத்துக் கூறி அதற்கான நிவாரண உதவி தர வேண்டும் என அம்மாநாடு கோரிக்கை வைத்தது. அந்த மாநில மாநாட்டில் பங்கேற்ற சார்பாளர்கள் அனைவரும் தாராள மனதோடு 40,000 ரூபாய்களை வாரி வழங்கி உள்ளனர். அந்த நன்கொடையை கேரள மாநில சங்கம் நமது தமிழ் மாநில சங்கத்திடம் வழங்கியுள்ளது. கேரள மாநில தோழர்களின் மனிதாபிமான உதவிக்கு தமிழ் மாநில சங்கம் மனதார வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

நிவாரணத்திற்கு வழங்கப்படும் பண உதவிகளை மாநில சங்க வங்கிக் கணக்கில் உடனடியாக செலுத்துமாறு அனைத்து தோழர்களையும் கேட்டுக் கொள்கிறோம்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**